Registered as a Newspaper

நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி-
A/L 87
கலை, வர்த்தகம்
மீட்டல் வகுப்புகள்
DAY CLASSES
ஆரம்பம்: 10-11-86
(கடந்த பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பல மாணவர்கள் பெற்றுள்ளனர்)

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
A/L 87
விஞ்ஞானம்
கிழமையில்
2 மீட்டல் வகுப்புகள்
ஒரு வினவிடை வகுப்பு
நடைபெறும்.
ஆரம்பம்: 10-11-86

கடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ ஐப்பசி மீ 18 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 01 (04-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 29


பிரபா


பாலசிங்கம்


பத்மநாபா


பாலகுமார்


உமா


செல்வம்

# போராளிகள் எம். ஜி. ஆரிடம் எழுத்து மூலம் புது யோசனைகள்

கொழும்பு, நவ. 4

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐந்து தமிழ்ப்போராளி அமைப்புக்களும் புதிய சொந்த யோசனைகளை சமர்ப்பித்திருக்கின்றன.**

இந்த யோசனைகள் தமிழக முதல் அமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகளைப்பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்காமல்போராளி அமைப்புக்கள் சொந்த புதிய யோசனைகளைச் சமர்ப்பித்து இருப்பதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

ஜனதிபதியைச் சந்திக்கும்போது கொழும்பில் உள்ள இலங்கைத் தூதர் திரு. டிக்ஷிற் இதுபற்றிய விவரங்களை வெளியிடுவார் என்றும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

போராளி அமைப்புகளின் புதிய யோசனைகள் 'சார்க்' மாநாட்டுக்கு முன்னர் ஜனதிபதியிடம் கையளிக்கப்படுமா? என்று கேட்டபோது, அதுகுறித்து இப்போதைக்குச் சொல்லமுடியாது என்றும் தூதரக வட்டாரம் தெரிவித்தது.

**தனித்தனி சந்திப்பு**

இதேவேளை ஐந்து தமிழ்ப்போராளி அமைப்புக்களின் தலைவர்களும்


எம். ஜி. ஆர்.

நேற்றுக்காலைமுதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்தனர்.

ஒவ்வொரு அமைப்பின் தலைவரும் முதல் அமைச்சரைத் தனித்தனியே சந்தித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இச்சந்திப்புகளின் போது முதலமைச்சருடன், அமைச்சர்கள் பண்ருட்டி இராமச்சந்திரன், பொன்னையன், இந்திய சட்ட ஆலோசகர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் இருந்தனர்.

கலந்துகொண்ட தமிழ்ப் போராளித் தலைவர்கள்விவரம் வருமாறு:

1. வி. பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம்(தமிழீழ விடுதலைப் புலிகள்).
(2) திரு. பாலகுமார் (ஈழப்புரட்சி அமைப்பு).
(3) திரு. செல்வம் (தமிழ்ஈழ விடுதலை இயக்கம்).
(4) திரு. பத்மநாபா (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி)
(5) திரு. உமாமகேஸ்வரன் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்).

(அ-எ)

## தீர்வு காண்பதற்கு எச்சரிக்கை அவசியம்

— எம். ஜி. ஆர்.

சென்னை, நவ. 3

30 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு எச்சரிக்கையுடன் தீர்வு காணப்பட வேண்டும்.

இப்படி தமிழக முதல் அமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

தமிழ்ப் போராளித் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்து இலங்கை அரசு யோசனைகள் பற்றிய கருத்துக்களை எழுத்து மூலம் பெற்றுக் கொண்ட பின்னர் திரு. இராமச்சந்திரன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

'தமிழ்ப் போராளித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஷிற் - ஜே.ஆர். சந்திப்பு இன்று

கொழும்பு, நவ. 4

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஷிற் இன்று ஜனதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து தமிழ்ப் போராளித் தலைவர்களின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பார்.

நேற்றுக்காலை சென்னையில் இருந்து திரு. டிக்ஷிற் கொழும்பு திரும்பினார்.

இன்றுதான் திரு. டிக்ஷிற் திரும்புவதாக இருந்தது. திடீரென்று நேற்றே திரும்பிவிட்டார். போராளி அமைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆதீனத்தில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 4

நல்லை ஆதீனத்தில் கந்தசஷ்டிவிழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சியான இன்று 'கூறும்அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்று' என்ற தலைப்பில் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசுவார். (இ-எ)

கல்லூரி மாணவன் கொலையைக் கண்டித்து

# சகல பாடசாலைகளிலும் நாளை பகிஷ்கரிப்பு

## ஹர்த்தால் அனுஷ்டிக்கவும் மாணவர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவம்பர். 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும், நாளை புதன்கிழமை மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பார்கள்.

நாளைய தினம், கடைகளை மூடியும் வங்கிகள் மற்றும் தியேட்டர்கள், வர்த்தக ஸ்தாபனங்களை மூடியும் ஹர்த்தால் நடத்துமாறும் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்-

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுக்காலை நடைபெற்ற மாணவர்கள் கூட்டம் ஒன்றிலேயே பகிஷ்கரிப்புக் குறித்தும், ஹர்த்தால் குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலை நேரத்தில், யாழ் மத்திய கல்லூரி மாணவன் பொ. விபுலானந்தன் கோட்டை முகாம் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், மாணவனின் பேரிழப்பை உலகுக்கு எடுத்துக் காட்டு முகமாகவுமே பரந்த அளவில் பாடசாலை பகிஷ்கரிப்பு நடத்த முடிவாகி இருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றும் கட்ட பேச்சில் பங்கு பற்றும் வாய்ப்பு அதிகம்

சென்னை, நவ. 3

போராளிகள் அமைப்புக்களும் மூன்றும் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகரித்திருப்பதாக சென்னையில் இருந்து கிடைத்த செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

புதிய சொந்த யோசனைகளை போராளி அமைப்புக்கள் சமர்ப்பித்த பின்னரே இவ் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இலங்கை அரசின் யோசனைகளில் தாயகக் கோட்பாடு இருக்கவில்லை என்பது குறித்து முதலமைச்சரிடம் அதிருப்தி தெரிவித்த போராளித்தலைவர்கள், பேச்சுக்களில் தங்கள் யோசனைகளும் ஆராயப்படும் பட்சத்தில் தாங்களும் அடுத்தகட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்ளமுடியும் என்று தெரிவித்தனர் என்று அறியப்படுவதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-எ)

## ஆரையம்பதியில் இருவர் சூட்டுக்கு பலி

மட்டக்களப்பு, நவ.4

ஆயுதப்படையினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் ஆரையம்பதிகிராமத்தில் 2 பொது மக்கள் உயிரிழந்தனர்.

ஒருவர் 27 வயதான அமிர்தலிங்கம் என்று அடையாளம் காணப்பட்டது. மற்றவர்அடையாளம் காணப்படவில்லை;

உன்னிச்சைத்துறையில் முகாமிட்டிருந்த ஆயுதப்படையினரும் மண்முனைத் துறையில் முகாமிட்டிருந்த ஆயுதபடையினரும் கல்லடி முகாமுக்குத் திரும்புகையிலேயே இத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

உயிரிழந்த அமிர்தலிங்கம், அமெரிக்கக் கூட்டுடன் கொக்கட்டிச்சோலையில் நடத்தப்படும் இறால் வளர்ப்பு கம்பனியின் ஊழியராவார்.

(இ-எ-21)

## இன்று யாழ் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், நவ. 4

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழுவினர் இன்று விசேஷ விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருகிறார்கள்,

யாழ் கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரியின் கட்டடங்களைப் பார்வையிடுவதற்காகவே இவர்கள் யாழ் வருகிறார்கள்.

வைத்திய அதிகாரிகள் சங்க தூதுக்குழுவின் தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்தி முனி**



எவ்வளவு கஷ்டங்கள், வசதியீனங்கள் இருந்தபோதிலும் எங்கடை குட்டியன்கள் அபாரமாகச் செய்திருக்கிறுங்கள் பாத்தியே......

சபாஷ் தம்பிமாரே! எதிர்காலத்திலை உலக சாதனைகளையும் நிலைநாட்டவேணும். அப்பதான்மேலும்பெருமை..!

## பத்திரிகை கட்டுக்குள் தங்கம்!

கொழும்பு, நவ. 4

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றின் முன்னாள் ஆசிரியர் ஒருவரின் பெயருக்கு முகவரியிடப்பட்ட பத்திரிகைக் கட்டு ஒன்றுக்குள் ரூ. 20 லட்சம் பெறுமதியான தங்கப் பாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பிரஸ்தாப நபரின் பெயருக்கு சிங்கப்பூரில் இருந்து இந்தப் பத்திரிகைக் கட்டு விமானத்தில் அனுப்பப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை அடுத்து இரு விமான நிலைய ஊழியர்கள் உட்பட ஐவர் கைதாகி உள்ளனர். (இ-உ)

தமிழீழ எதிர்ப்புக் கோஷத்துடனுன

# பணயக் கைதிகளுடனுன நடைபவனி முகாம் வந்து சேர்ந்தது

மட்டக்களப்பு, நவ. 4

பொது மக்களைப் பணயக் கைதிகளாகக் கூட்டிக்கொண்டு கொக்கட்டிச்சோலையில் இருந்து நடைபவனியாக வந்த ஆயுதப்படையினர் நேற்றுக் கல்லடி முகாம் வந்து சேர்ந்தனர்.

கோட்டைமுனைப்பாலத்தடியில் இருந்து கல்லடி முகாம் வரை பணயக் கைதிகளான பொது மக்கள் ''தமிழீழம் வேண்டாம்; தீவிரவாதம்வேண்டாம்''— என்று கோஷிக்க வைக்கப்பட்டனர்.

சுமார் 300 பணயக் கைதிகளும் மட்டக்களப்புப் பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம். தம்பிமுத்துவின் வீடு இருக்கும் வீதியால் கல்லடி முகாமுக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

திரு. சாம். தம்பிமுத்து தனது வீட்டில் நின்றபடி பொது மக்களை

(4-ஆம் பக்கம் பார்க்க)

**உடன் விற்பனைக்குண்டு**

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கமைய நாற்றுப் போடப்பட்டவை.

விலை ரூபா 4-00

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;-
ஷப்ரு றிலேற்றஸ் தென்னந்தோட்டம்,
குடமியன்,
வரணி.

மே/பா உதயன்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## சுபநேரம்

04-11-1986

செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.34 முதல் 12.04வரை
ராகுகாலம்:
8.04 முதல் 4.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா கொலை!

கொழும்பு, நவ.4

கொட்டாஞ்சேனை மாரியம்மன்கோயில் தர்மகர்த்தாவான 65 வயது நிரம்பிய கே. எஸ். தியாகராசா சவரக்கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

கடந்த ஞாயிறு இரவு 8-30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. கோயிலுக்குச் சமீபத்தில் அவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. கழுத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

ஞாயிறு காலை இவர் யாரோ தன்னை மிரட்டுவதாக கொட்டாஞ்சேனைப் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குற்றத்தடுப்பு பிரிவு பொலீஸ் அதிபர் ஐ. கனகரத்தினம் விசாரணை நடத்துகின்றார். (இ-ஐ-எ)

## 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில்: யாழ் மாவட்டம் முன்னணியில் 2மாணவருக்கு தலா 189 புள்ளிகள்

பலாலி, நவ. 4

கடந்த சனிக்கிழமை வெளியான 5 ஆம் வகுப்பு (6 ஆம் ஆண்டு) புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தலா 189 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் மட்டும் அல்ல அகில இலங்கையிலேயே முதலாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவன் செல்வன். எம். அரவிந்தன், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவன் செல்வன். ரீ. திருமுருகன் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இவர்கள் இருவரையும் யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பாராட்டி உள்ளார். புலமைப்பரிசில் தேர்வில் அகில இலங்கையிலும் யாழ் மாவட்டமே இம்முறை முன்னணியில் நிற்கிறது.

யாழ் மாவட்டத்தில் கோப்பாய் கல்வி வட்டாரம் விகிதாசாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

கோப்பாய் நாவலர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 40 சதவீத மாணேர் புலமைப்பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையால் கோப்பாய் கல்வி வட்டா

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ செய்திக்கொத்து ★

### பதவி உயர்வு

பலாலி, நவ.4

யாழ் மாவட்ட மேலதிக நீதிபதியாக திரு வி. சிதம்பரநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றிய இவர் தனது புதிய பதவியை 1-11-86 தொடக்கம் ஏற்றுள்ளார்.

(இ-119)

### சளிச்சுரம்

வேலணை, நவ.4

தீவுப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு சளிச்சுரம் பரவி வருகிறது.

இந்நோயினால் சில தினங்களுக்கு முன்னர் வேலணையில் இரு குழந்தைகள் ஒரேநாளில் உயிரிழந்துள்ளனர்.

(இ-167)

### பரீட்சை

புங்குடுதீவு, நவ.4

யாழ் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் தமிழ்மொழி- சைவநெறித் தேர்வுகள் இம்மாதம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி வெளி மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்களும் பெருமளவில் இப்பரீட்சைக்குத் தோற்ற விருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-131)

### புதிய சம்பளம் இல்லை

மன்னார், நவ.4

புதிய சுற்றறிக்கையின் படி மன்னார் மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு புதிய சம்பளம் கிடைக்கவில்லை.

புதிய சம்பளம் இம்மாதத்திலாவது கிடைக்குமா என ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

(இ-ரி)

### போஷாக்குவாரம்

புங்குடுதீவு, நவ.4

புங்குடுதீவுபோஷாக்கு வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்திலும், கொத்தணி மட்டத்திலும் இது சம்பந்தமான பேச்சு, பாட்டு, சித்திரம், கட்டுரை, நாடகப் போட்டிகள் நிகழவுள்ளன.

இறுதிப் போட்டிகள் இம்மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணி முதல் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

(இ-131)


A/L 87

தூய பிரயோக கணிதம்

துரித மீட்டல் பகல் நேர வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7.45: காவிகள்

9.00: அட்சர கணிதம் (கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:

ரவிமோகன்

யாழ்ப்பாணம்

(வலிங்டன சந்திக்கும் அனுமான் கோவிலுக்கும் இடையில்)


### அணுசக்தி ஒப்பந்தம் ஒத்திவைப்பு

மாஸ்கோ நவ. 4

மேற்கு ஜெர்மனியுடன் அணுசக்தி ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடுவதை ரஷ்யா திடீரென ஒத்திவைத்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை கைச்சாத்திட வேண்டியிருந்த இந்த ஒப்பந்தம் ஒத்திவைக்கப்பட்டது குறித்து எந்தக் காரணமும் வெளியிடப்படவில்லை.

(ஒ)


ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- ✱ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- ✱ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- ✱ வெள்ளைச் சீமெந்து
- ✱ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- ✱ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்கும்.

Rs. 6/75-க்கு மேல்

றமசன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,

கொழும்பு-12

தொலைபேசி: 34411 - 31511



GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்

● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வர்.

டென்மார்க், கனடா செல்வதற்கு

உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOD), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

இன்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.


யுத்த நிறுத்த மீறல்:

# பாப்பரசரிடம் முறையிட முடிவு

## பிரசைகள் குழு அவசரத் தந்தி

மட்டக்களப்பு, நவ. 5

மட்டக்களப்பில் உலக சமாதான தினத்திற்கான சகலமத பிரார்த்தனைத் தினத்தன்று அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட யுத்தநிறுத்த மீறல் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புப் பிரசைகள் குழு பாப்பரசருக்கு முறையிட முடிவு செய்திருக்கிறது.

மட்டக்களப்பு பிரசைகள் குழு செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து இது தொடர்பாக பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி வண. பிதா டாக்டர் அம்பிரோஸ் டீ பெலிதியாவுக்கு அவசர தந்தியொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

புனித திருத்தந்தை விடுத்த வேண்டுகோள் ஒன்றை அடுத்தே கடந்த 27 ஆம் திகதி சமாதான தினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றைய தினம் யுத்த நிறுத்தத்தில் ஈடுபட தமிழ் போராளிகள் குழுக்களும் அரசாங்கமும் இணங்கியிருந்தன என்பதும்-

அன்றைய தினம் அரச படைகள் யுத்தநிறுத்தத்தை மீறி மீனவர் ஒருவரை சுட்டுக் காயப்படுத்தின என்பதும்-

இது குறித்து மட்டக்களப்பு ஆயர் வண. கிங்ஸிலி சுவாம்பிள்ளை தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார் என்பதும் தெரிந்ததே.

(உ-21)

# குழந்தை தொடக்கம் வயோதிபர் வரைக்கும் பாதுகாப்பு இல்லை

மட்டக்களப்பு, நவ 4

எமது மாவட்டத்தின் இன்றைய சூழ்நிலையில் மாணவசமுதாயம் மட்டுமல்ல குழந்தைகள் தொடக்கம் வயோதிபர்கள் வரை அனைவரும் பாதுகாப்பு இல்லாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாணவர் நலன்புரிச் சங்க காப்பாளர்களில் ஒருவரான வண. பிதா சந்திரா பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத்தின் ஆதரவில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைப்பு தொடர்பாக சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

எமது பகுதியில் ஆயுதப்படையினரின் செயல்பாடுகள் மீண்டும் அதிகரித்து வருகின்றன.

காலையில் பாடசாலைக்குசெல்லும் மாணவன் வீடு திரும்பும் வரை நிம்மதியின்றி பெற்றோர்கள் வாழவேண்டி இருக்கிறது. மாணவர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் ஒருமித்து குரல் எழுப்ப வேண்டும்.

அடுத்த வீட்டுக்காரனின் பிள்ளைதான் படையினரால் துன்புறுத்தப்பட்டுள்ளான் என்று கருதி விடக்கூடாது.

இந் நிலைமை நாளை உங்கள் பிள்ளைக்கும் ஏற்படலாம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-21)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## யுவதிகளுக்கு தையல் பயிற்சி அவசியம்

### திறப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை நவ 4

யுவதிகள் தங்கள் வருங்கால வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்ள தொழிற் பயிற்சிகள் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். கலைநகர் யுவதிகளின் நன்மை கருதி இன்று தையல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. இங்குள்ள சகல யுவதிகளும் இப் பயிற்சி நிலையத்தைப் பயன்படுத்தி தையல் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ மாதர் கிராம முன்னேற்றச் சங்கத் தையல் பயிற்சி நிலையத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து உரையாற்றிய வட்டு கிழக்கு விசேஷ சேவை உத்தியோகத்தரும் அகில இலங்கை விசேஷ சேவை அலுவலர் சம்மேளன பொதுச் செயலாளருமான திரு. வி. ரி. கதிர்காமநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திறப்பு விழா சங்கத் தலைவி திருமதி கு. பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

சங்கச் செயலாளர் செல்வி ஜெயந்தி செகராசசிங்கம் நன்றி நவின்றார்.

(இ.161)

## கவசவாகனம் மோதியதால் ஒருவர் பலி

மட்டக்களப்பு நவ. 4

வேகமாக விரைந்த கவசவாகனம் பாதசாரி மீது மோதியதையடுத்து பாதசாரி அந்த இடத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு- வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

கொடுவாமடு என்னுமிடத்தில் போராளிகள்- சிப்பாய்கள் மோதுவதாக கிடைத்த தகவலையடுத்து சந்திவெளிமுகாமிலிருந்து புறப்பட்ட வாகனம்தான் இந்த விபத்தில் சிக்கியது.

இறந்த பாதசாரி அடையாளம் காணப்படவில்லையென தெரிய வருகிறது.

போராளிகள் — சிப்பாய்கள் மோதலில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றுமொருவர் காயமுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ - 21)

## குண்டுச் சத்தம் மத்தியில் தொடரும் சேவை

பலாலி, நவ. 4

இப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள வந்த நான் முதலில் குண்டுச் சத்தங்களால் அதிர்ந்து போனேன். இத்தகைய சூழலில் கல்விகற்கும்- கற்பிக்கும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய திரு. வே. தங்கராசா (பிரதம கல்வி அதிகாரி) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; பாடசாலை அபிவிருத்திச் சபை இப்பாடசாலை வளர்ச்சிக்கு ஆற்றும் சேவைக்காக நான் பாராட்டுகின்றேன் என்றார்.

(இ-119

## விளையாட்டரங்கு

### ஒஸ்மானியா வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 4

பாடசாலைகளின் மேற்பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஒஸ்மானியா கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒஸ்மானியா அணி காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அணியை 3—0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

இந்த ஆட்டம் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இடைவேளை வரை இரு அணிகளும் எந்த கோலும் போடவில்லை.

இடைவேளைக்குப் பின் ஒஸ்மானியா அணி சிறப்பாக விளையாடி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது.

ஏ.ஸி.நவாஸ், எம் எச். எம். ஜான்ஸின், எம்.ஏ. எச், ஏ. முகைதீன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

(உ)

### வட்டு தொழில் நுட்பக் கல்லூரி வெற்றி

வட்டுக்கோட்டை, நவ.4

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரிக்கும் அராலி வடக்கு சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி 3 – 1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.(இ–161)

## விழிப்புலன் அற்றோர் புறக்கணிக்கப்படக் கூடாது

### வெள்ளைப்பிரம்பு தினத்தில் உரை

அச்சுவேலி, நவ. 4

விழிப்புலன் அற்றவர்கள் புறக்கணிக்கப்படாமல் சமுதாயத்தில் சமமான அந்தஸ்துடன் வாழ்வதற்கு மற்றவர்கள் உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

அச்சுவேலி மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் அச்சுவேலி லயன்ஸ் கழக ஆதரவுடன் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை கொண்டாடியது.

அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றுகையில் சமுதாயத்தில் விழிப்புலனற்றோர்பற்றி சரியான எண்ணப்பாடு ஏற்படவில்லை.

இதனால்தான் அவர்களின் திறமை வெளிக்கொணரப்படாமல்முடக்கப்படுகின்றது. விழிப்புலனற்றோர் ஏனைய துறைகளில் பல்வேறுவிதமான ஆற்றல் உள்ளவர்களாக [illegible] யாழ் பல்கலைக் கழகத்திலும் பல்கலைக்கழக விடுதியிலும் நேரடியாக பார்த்திருக்கின்றேன் என்றார்.

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. ஜே. எஸ். டேவிற் உரையாற்றும்போது சமுதாயத்தில் காணப்படும் விழிப்புலனற்றோருக்கு அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான வழிமுறைகள் பற்றியும் கல்வி வளர்ச்சிக்கான அமைப்புக்கள்பற்றியும்மாணவர்கள் விளக்கிக் கூறி உதவி செய்ய வேண்டும் எனக் கூறினார்.

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு ஆவரங்கால் சிவன் கோவிலில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம் அச்சுவேலியில் முடிவடைந்தது.

கூட்டத்தில் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கமலநாதன், திரு. கு. கணேசன், திரு. என். மதனசேகரம், விழிப்புலனற்றோர் சங்கச் செயலாளர் திரு. ஏ. ரவீந்திரன், ஆசிரியை செல்வி. ஏ. சின்னத்தம்பி உட்பட பலர் உரையாற்றினர்.

அச்சுவேலி லயன்ஸ் கழக செயலாளர் லயன். முத்துசிவஞானம் நன்றி கூறினார்.

30 வெள்ளைப் பிரம்புகளும் [illegible]ப்பட்டன.

(இ-11)

## நல்ல பிரஜைகளை உருவாக்கும் சாரணர் இயக்கம்

காங்கேசன்துறை, நவ. 4

நாட்டுக்கேற்ற, நற்பிரஜைகளை உருவாக்க சாரணர் இயக்கம் பெரிதும் உதவுகிறது. 80 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் இன்று சிறப்பாக வளர்ந்து வருகிறது. மாணவர்களை ஒரு கட்டுக்கோப்புடன் நெறிப்படுத்த இந்த இயக்கம் வழி காட்டுகிறது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெற்ற காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்க வருடாந்த பாசறைவிழாவில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பாசறை விழாவில் 18 சாரணர் குழுக்களைச் சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட சாரணர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட சாரண ஆணையாளர் திரு. நா. போஜனும் உதவி மாவட்ட ஆணையாளர்களும் இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தனர்.

முன்னாள் மாவட்ட ஆணையாளர் திரு. இ. விசுவநாதன் கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

கலாநிதி சு. வித்தியானந்தன் இவ் விழாவில் சாரணர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று உரையாற்றினார்.

வைபவத்தில் மற்றும் பலரும் பேசினர்.

பாசறை விழா போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(இ-68)

## மக்கள் முகம்

### ஆலய பரிபாலனசபை

பலாலி, நவ. 4

தெல்லிப்பளை தென்மேற்கு மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக திரு. சி. அப்புத்துரை, செயலாளராக திரு. வ. சிதம்பரநாதன், பொருளாளராக திரு. சி. நவரத்தினம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவர்களாகத் திருவாளர்கள் க. செல்லத்துரை, பொ. இராசேந்திரம், ச. ஆறுமுகம் ஆகியோரும்—

உபசெயலாளராக திரு. சி. சிவபாலனும், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் க. பொன்னம்பலம், க. குட்டித்தம்பி, வி. விசுவபாலசிங்கம், க. சுப்பிரமணியம், வ. கனகசிங்கம், திருமதி கு. செல்வலக்ஷ்மி ஆகியோரும்—

கணக்குப் பரிசோதகராக திருமதி ப. பார்வதிநாதசிவம், செல்வி. க. சாந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(இ–119)

## அறிவித்தல்

யாழ்/ கன்னாதிட்டி வீதியில் உள்ள 124, 126 இலக்கம் கொண்ட கடைகளும் அதைச் சார்ந்த பிறபகுதிகளும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வாதராசப் பெருமாள் தேவஸ்தானத்துக்கு உரிமையானவை. இந்த ஸ்தாபனங்களை தேவஸ்தானத்தின் அனுமதியின்றி வேறு எவரும் கையேற்பதோ அல்லது குடியிருப்பதோ சட்ட விரோதமானதென்பதை அறியத்தருகின்றேன்.

ந. செல்லப்பா

அறங்காவலர்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.


பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி

● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடு நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:

N.பாலா

திருச்செல்வம் வீதி,

கோண்டாவில் கிழக்கு,

கோண்டாவில்.

✱ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

✱ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.



ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே. கே. எஸ். வீதி,

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நமது உள்ளம் கண்ணுடி போன்றது. அதில் இறைவனுடைய பிரதிபிம்பம் தெரிய வேண்டும் என்ருல் பக்தி, தூய்மை, ஒழுக்கம் என்ற ரசம் கண்ணுடியின் பின் பக்கம் பூசப்பட வேண்டும்.

--ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி


# உதயன்

உண்மை - நிர்சானம் - ஐடு விநைவை

இல. 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 04-11-1986 த. பெ. இல.23


## பல்கலைக்கழகக் கல்வி முறை

மட்டக்களப்புப் பல்கலைக்கழக வளாகம் பூரணத்துவமான கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டு விட்டது.

தரமுயர்த்தல் சம்பந்தமாக இரண்டு வைபவங்கள் நடந்தன. அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்ட வைபவம் கொழும்பில் நடந்தது. கிழக்கிலங்கைக் கல்விமான்கள், மதகுருமார், பெற்ருேர்கள், மாணவர்கள் கலந்து கொண்ட இரண்டாவது வைபவம் வந்தாறுமூலையில் உள்ள பல்கலைக்கழக மண்டபத்தில் நடந்தது.

தரம் உயர்த்தலை ஒரே வைபவமாகப் பல்கலைக்கழகத்திலேயே கொண்டாட முடியாமற் போனது பெரும் துரதிஷ்டமாகும். அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டக்களப்புச் செல்ல முடியாதவாறு பாதுகாப்புக் காரணங்கள் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

எது எவ்வாருயினும், கிழக்கிலங்கைக்கும் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழக வசதி கிடைத்தது தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும்.

வடக்கிலும், கிழக்கிலும் தனித்தனியாகப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலத்துக்கு முந்தியது.

பல்கலைக்கழக நிர்வாகம் பரவலாக்கப்படும் கட்டம் வந்தபோது, யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகம் நிறுவப்பட்டது. பின்னர் அது பூரண பல்கலைக்கழகமாகியது,

அதே போலக் கிழக்கிலும் வளாகம் நிறுவப்பட்டு இப்போது பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது.

பிரதேச ரீதியாகப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுவது அந்தந்தப் பகுதியின் உயர்கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். அதற்கேற்ற விதத்தில் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் பூரணத்துவம் வாய்ந்தவையாக இருத்தல் அவசியம்.

பூரணத்துவம் என்பது வெறும் வார்த்தையில் மட்டும் இருக்கக் கூடாது. அந்தந்தப் பகுதி மாணவர்களது உயர்கல்வித் தேவையை சகல துறைகளிலும் பூரணமாக வழங்குவதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட வேண்டும்.

அதுமட்டுமன்று, அந்தந்தப் பிரதேசத்தில் உயர்கல்வி பெறத் தகுதி உடைய சகலரும் அங்குள்ள பல்கலைக்கழகத்திலேயே பயில்வதற்கு வாய்ப்பை உண்டாக்குவது அவசியம். இடமின்மை, போதனை வசதி இன்மை போன்ற குறைபாடுகளால் ஒரு பிரதேச மாணவன் மறு பிரதேசம் சென்று பயில வேண்டியநிலை இருக்கக் கூடாது.

யாழ்ப்பாணத்தில் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் இருந்தாலும் பல துறைகளைப் பயில்வதற்கு இப்பகுதி மாணவர் இன்னமும் கொழும்புக்கும் பேராதனைக்கும் கட்டுப்பெத்தைக்கும் போக வேண்டி இருக்கிறது. அந்த நிலைமை கிழக்கிலங்கை மாணவருக்கும் ஏற்படக்கூடாது.

தமிழ் மாணவர்கள் தமது மண்ணிற்கும், பிரதேசத்திற்கும் அவற்றின் வளத்துக்கும், சிறப்புக்கும் உதவ வேண்டுமானுல் நிச்சயம் அவர்கள் தமது உயர்கல்வியை தங்கள் பிரதேசங்களில் அவற்றின் சூழலிலேயே பயில்வது பிரதானம்.

அது மட்டுமன்று. தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மக்களின் சமய, கலை, கலாசார மேம்பாட்டுக்கும் பொருளாதார, அரசியல் சமூக முன்னேற்றத்துக்கும் உகந்த புதிய கல்வி முறையை மேற்கொள்வதும் அவசியமாகும்.

மட்டக்களப்புப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கே. டி. அருட்பிரகாசத்திடம் அத்தகைய தீர்க்க தரிசனம் இருப்பதை அவரது பேச்சு உணர்த்துகிறது.

இலங்கையில் 1940 ஆம் ஆண்டுகளில் தான் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அக்கால சூழ்நிலைக்கு ஏற்ப வகுக்கப்பட்ட கல்விமுறையே இன்னமும் பல்கலைக்கழகங்களில் உள்ளன. எமது பல்கலைக்கழகம் இருபத்தொராம் நூற்ருண்டுக்கு ஈடு செய்யக்கூடிய கல்வி முறையை வகுத்துச் செயற்படுத்தத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பல்கலைக் கழகங்களின் கல்வி முறை இருபத்தொராம் நூற்ருண்டுக்குஈடுகொடுக்கக் கூடியதாக மட்டுமன்றி, எமது பிரதேசங்களின் சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகளுக்கும் புத்துயிர் கொடுக்கவும், அவற்றை மேலும் விருத்தி செய்யவும் வழிசெய்யக் கூடியதாக வகுப்பது பிரதானம்.

இதில் யாழ். பல்கலைக்கழகமும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகமும் இணைந்து செயற்படுவது மேலும் வரவேற்கத் தக்கது.

## இஸ்ரவேல் பெரும் ஆர்வம்

தெல்அவிவ் நவ.3

தென்கிழக்கு ஆஸிய, பசுபிக் பிராந்திய நாடுகளுடன் உறவுகளை விருத்தி செய்து கொள்வதற்கான பெரும் முயற்சியொன்றை இஸ்ரவேல் ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக இஸ்ரவேல் ஜனதிபதி ஹேர்ஷாக் இந்தபகுதிகளில் உள்ள ஐந்து நாடுகளுக்கு அடுத்த வாரம் விஜயம் மேற் கொள்வார்.

சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிலிப்பீன்ஸ், பிஜி ஆகிய நாடுகள் இந்த பயணத்தில் விஜயம் செய்யப்படவுள்ளன. (ஒ)

## வெளி உலகில்

### பங்களாதேஷில் ஜிம்மிகார்ட்டர்

வாஷிங்டன், நவ. 3

றேகன் நிர்வாகத்தின் விண்வெளி போராயுத திட்டம் பெரும் செலவு பிடிக்கக் கூடியது எனவும் போராயுத கட்டுப்பாடு சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு பெரியதடை எனவும் முன்னுள் ஜனதிபதி ஜிம்மிகார்ட்டர் கருத்து வெளியிட்டார்.

இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு பங்களாதேஷ் சென்ற ஜிம்மி கார்ட்டர் இவ்வாறு தெரிவித்தார்.

மாஸ்கோவும், வாஷிங்டனும் விரைவில் மற்ருெரு உச்சிமாநாட்டை நடத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ)

### தலாய்லாமா வாசஸ்தலம் புனரமைப்பு

பீகிங், நவ.3

தலாய்லாமாவின் முன்னுள் வாசஸ்தலத்தை சீன அதிகாரிகள் புனரமைப்புச் செய்து அவரது குடும்பத்தினரிடம் கையளித்தனர்.

இதனை பீகிங்கில் இருந்து வெளியான அறிக்கைகள் தெரிவித்தன.

சீனவிற்கு எதிரான கிளர்ச்சி தோல்வியுற்றதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிய தலாய்லாமாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கை இதுவாகும். (ஒ)

### துனீஷியாவில் தேர்தல்

துனிஸ், நவ.3

துனீஷியாவில்பொதுத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

ஜனதிபதி ஹபீப் போகியாவின் ஆளும் சோஷலிஸ்ட் கட்சி அமோக வெற்றி பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சகல எதிர்க்கட்சிகளும் தேர்தலை நிராகரித்துள்ளன.

ஜனதிபதியைஎதிர்த்து 15 சுயேட்சையாளர்கள் போட்டியிட்டனர். (ஒ)

### நிலநடுக்க நடவடிக்கை

சிம்லா, நவ.3

ஹிமாசல் பிரதேசத்தில் நில நடுக்கத்தால் பாதிப்படையக் கூடிய பகுதிகளையும் நிலநடுக்கம் ஏற்பட்டால் விளையக் கூடிய பாதிப்பைக் குறைக்கும் விதங்களையும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மரங்களையும் சிறு கற்களையும் கொண்டு மாடியற்ற சிறு வீடுகளை கட்ட வேண்டும். மாடிகளைக் கட்ட வேண்டுமெனின் செங்கற்களாலும் கல்லாலும் கட்டப்பட்ட சுவர்களுக்குக் குறுக்கே வெவ்வேறு இடங்களில் மரங்களை அரணுக வைக்க வேண்டும்.

இவ்வாறு அந்த நிபுணர் குழு தெரிவித்தது. (ஒ)

# ஈரானிய விமானம் விழுந்து நொருங்கி 90 இராணுவ வீரர் பலி

தெஹ்ரான், நவ. 3

ஈரானிய இராணுவ வீரர்களை ஏற்றிச்சென்ற ராணுவ விமானம் ஒன்று விழுந்து நொருங்கியது. இதனால் அதில் பயணம் செய்த 90 வீரர்களும் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பகுதியை அண்மித்த ஈரான் பகுதியில் இந்த விபத்து நடந்துள்ளது.

சி 130 ரக விமானமான இது இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்துக்குள் சிக்கியிருக்கலாம் என ஈரான் அறிவித்தது.

உதவிக் குழுக்கள் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்துள்ளன. (ஒ)

## அமெரிக்க பணயக்கைதி விடுதலை

பெய்ரூட், நவ. 3

லெபனுனில் 18 மாத காலமாக காவலில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கரான டேவிட் ஜாக்கப்ஸன் நேற்று பெய்ரூட்டில் விடுதலை செய்யப்பட்டார்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் இவர் கடத்தப்பட்டு பணயக் கைதியாக இதுவரை கிளர்ச்சியாளர்களால் வைக்கப்பட்டிருந்தார்.

தற்பொழுது நிபந்தனையின்றி இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ஒ)

## சட்டசபை கூட்டத்தொடர்

சென்னை, நவ. 3

தமிழ்நாடு சட்டப் பேரவையின் மாரிகாலக் கூட்டத் தொடர் நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாகும்:

இரண்டு வாரகாலத்துக்குச் சட்டசபைக் கூட்டம் நடைபெறும். (உ-எ)

## என்ரைல் மீது ஊழல் குற்றம்?

மணிலா, நவ. 3

பிலிப்பீன்ஸின் சர்ச்சைக்குரிய பாதுகாப்பு அமைச்சர் ஜவான் பொன்ஸ் என்ரைல் அமெரிக்கா வழங்கிய உதவித் தொகைகளை தனது தனிப்பட்ட அலுவல்களுக்குப் பயன் படுத்திஞரா?

இதற்கான விசாரணை ஒன்றை அமெரிக்க அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

என்ரைல் முன்னுள் ஜனதிபதி மார்க்கோஸின் அரசாங்கத்திலும் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர்.

அந்த வேளையில் அமெரிக்காவினுல் பிலிப்பீன்ஸிற்கு வழங்கப்பட்ட உதவிகளை அவர் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

என்ரைல் அமெரிக்க நகரான சான்பிரான்ஸிக்கோவில் இரண்டு வீடுகளைவாங்கியுள்ளார்.

இதன் மதிப்பு 15 லட்சம் அமெரிக்க டாலர்களாகும். (ஒ)

## கலிபோர்னியாவில் ஆங்கிலமொழி பாவனை

வாஷிங்டன், நவ. 3

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலம் பிரகடனம் செய்யும் ஆலோசனையொன்று இந்த வாரத்தில் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் ஆராயப்படும்.

ஸ்பானிய மொழியின் உபயோகத்தை மட்டுப் படுத்தும் இந்த ஆலோசனை குறித்து கலிபோர்னியாவில் வாழும் 2 கோடி 60 லட்சம் மக்கள் தமது கருத்தைத் தெரிவிப்பார்கள்.

கலிபோர்னியாவில் உள்ள ஸ்பானிய சிவில் உரிமைக் குழு இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (ஒ)

## வேகநோயின் அதிவேகம்

லண்டன், நவ. 3

அடுத்த இருபது ஆண்டு காலத்தில் பிரிட்டனில் 'எய்ட்ஸ்' நோயினுல் வருடாந்தம் 40 ஆயிரம் பேர்வரை மரணமடைவார்கள்.

இவ்வாறு பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோர்ச் நொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இவர் கம்பியூட்டர் மூலம் மேற்கொண்ட ஆய்வே இத்தகவலை வெளிப்படுத்தியது. (ஒ)

# சேவலும்மயிலும் கதை

சக்கிலவாது மன்னனின் மூத்தபிள்ளைகளான சூரன் — பத்மன் எனும் இரட்டையர் ஒருநாள் கைலை சென்றனர். அங்கு

சூரனும் — பத்மனும் சூழ்ச்சி செய்து வேலவனி



டத்தில் உள்ள சேவலையும் மயிலையும் அழித்து அந்தப் பதவிக்குத் தாம் அமர முயற்சித்தனர்.

சூரன் கருடனிடம் சென்று பணிவுடன் வணங்கி கருடபகவானே நீயோபட்சிராஜா உன்னை அனைவருமே பணிந்து வணங்க வேண்டியது முறை. ஆனுல் மயிலோ உன்னை மதிப்பதே கிடையாது. அதற்கு தான் என்ற மமதை அதிகம் உண்டு என்றுகூற அதை கேட்ட கருடனுக்குச் சிற்றம் ஏற்பட்டது.

இதனுடன் விடவில்லை. சூரன் மயிலிடத்தில் சென்று மனம் கவரும் மயிலே நீயேமந்திரரூபம். அதிலும் ஆறுமுகனின் வாகனம். ஆனுல் இந்த கருடன் என்ன சொல்கிருன் தெரியுமா? உன்னுல் வெகுதூரம் பறக்க முடியாது என ஏளனம் செய்கிருன். என்ன இருந்தாலும் கருடனுக்கு கர்வம் அதிகம் என்றுகூற மயிலுக்கும் சினம் ஏற்படுகிறது. இதனுல் கருடனும்—மயிலும் சண்டை இடுகின்றன.

இதேபோலவே பத்மன் சேவலுக்கும் அன்னத்திற்கும் பகையைஉண்டு பண்ணி சண்டை இட வைத்தான்.

இவற்றைஅவதானித்த முருகன் சூரனையும் பத்மனையும் அழைத்து எதற்காக இவ்வாறு செய்தீர்கள் என வினவியபோது பெருமானே தங்களுக்கு கொடியாகவும்— வாகனமாகவும் விளங்கக்கூடிய பேற்றை எமக்குத் தர வேண்டும் என்பதினுலேயே இவ்வாறு செய்தோம் என சூரனும்— பத்மனும் குறிப்பிட்டனர்.

நடந்ததை உணர்ந்த பெருமான் தங்கள்கருத்து நல்லதுதான். ஆனுல் அதனை அடைய மேற்கொண்ட முறைதான் தவறு. அசத்தியத்தையும் சத்தியத்தில்தான்வெல்ல முடியும், பொய்மைக்கு எக்காலத்திலும் வெற்றி கிடையாது. நீங்கள் செய்த குற்றத்திற்காக விரைவில் அசுரராகக் கடவது—

என்று சாபம் அளித்தார்

சூரனின் பூர்வஜென்ம வேண்டுகோளுக்கு பலன் அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் உதித்தார் சுவாமி. சூரசம்ஹாரம் செய்ததால் தான் அவன் அந்த இரு உருவங்களையும் அடைய முடியும் என்பதன் பொருட்டே சரவணப் பொய்கையில் அவர் உதித்தருளிஞர்.

தேவர்களின் தவத்திற்கு மனமிரங்கி அவர்களுக்கு அருள் புரிவதற்காக மட்டும் பஞ்சமுகத்திலிருந்து இந்த ஆறுமுகம் தோன்றவில்லை. தேவர்களின் விரோதியான சூரன் முற்பிறப்பில் புரிந்ததவத்திற்கும் — வேண்டுகோளுக்கும் அருள் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும் தான் பெருமானின் உதயம் நிறைந்தேறியது. முற்பிறவியில் விடுத்த வேண்டுகோளின் காரணத்தினுல்தான் முருகன் வாயிலாகஞானம்பெற்ற சூரபன்மன் யுத்தத்திலே அந்த அழகுத் திரு உருவத்தை கிடைத்தற்கரிய அமுதமாக பக்தி சிரத்தையுடன் உருகிஞன். அது மட்டுமன்றி கொடியவனுக இருந்தும் அடியவர் தொழும் பொருட்டு ஆறுமுகப் பெருமானுக்கு சேவலும் மயிலுமாயிஞன்.

**கந்தஷஷ்டி மூன்ருவது நாள் இன்று**

**து. இராதாகிருஷ்ணன்**

## ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி மிக முக்கியமானது

சுன்னுகம், நவ. 4

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் பங்கு மிகவும் முக்கியமானது ஆகும்.

கந்தரோடை ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பேசிய திரு. ஆ. சி. கணேசவேல் மேற்கண்டவாறு கூறிஞர்.

விழாவிற்கு நிலையத் தலைவர் திரு. க. [illegible] தையா தலைமை வகித்தார்.

திரு. கணேசவேல் தொடர்ந்து பேசுகையில் எமது சிறுவர்களுக்கு போஷாக்கு உணவாக பல வருடங்களாகக் கிடைத்து வந்த திரிப்போஷா இப்போது கிடைப்பதில்லை.

இதனுல் சிறுவர்களின் உடல்நிலை கெடாத வகையில் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு தாய்மாரினதும் கடமை ஆகும் என்ருர்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னுள் உறுப்பினர் டாக்டர் ஆ. நடராசா பேசுகையில் [illegible] இன்று நிழிவு [illegible] வர்கள் இருப்பதனுல் இவர்களுக்கு ஆலோசனை கூற ஒரு சங்கம் கிராமம் தோறும் உருவாக்கப்பட வேண்டும் என்ருர்.

சுன்னுகம் பட்டின சபையின் முன்னுள் உபதலைவர் திரு. மா. நடராசா, திரு. சின்ன [illegible] ஆகியோரும் பேசினர். (இ-27)

## பொய்யாமொழி



**குறள்:**

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்.

**பொருள்:**

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினுல் ஏற்படும்; அதுபோல் அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

# அறியாமையும், பயமும் நீங்க வேலும் மயிலும் துணை

## கந்தஷஷ்டி விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ.4

வேலும் மயிலும்துணை என்பது நம்மை உய்யக் கொள்ளும் மந்திரமாகும். அந்த மந்திரத்தினுல் பயமும், அறியாமையும் நீங்கும்.

அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் மேற்கண்டவாறு சொன்ஞர்.

நல்லை ஆதீனத்தில் ஞாயிறு ஆரம்பமான கந்தசஷ்டி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் 'ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்று' என்ற தலைப்பில் திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசிஞர்.

அவர் மேலும்சொன்னதாவது;

மயலைத் தீர்ப்பது மயில். உயிர் இறைவன் அறிவித்தாலன்றி அறிய முடியாததாய் இறைவன் உணர்த்திய வழியே உணரும் இயல்புடையது.

உயிர்களின் இயல்புப் படியே அதனை உய்விக்கக் கொண்டுள்ள பேருளான பேராற்றலே மயிலின் திருவுரு ஆகும்.

மறைந்திருந்து ஆன்மாவை பக்குவப்படுத்தி இறைவன் திருவடிக்குத் தகுதிப்பாடு உள்ளதாய்ச் செய்யும் திரோதன சக்தியே மயிலாகும்.

நல்லறிவு வரப்பெற்ற சூரபதுமன் செவ்வேற்பரமன் சேவடி பணிந்து சேவலும் மயிலுமாக மாறிஞன். சூரபதுமன் ஆணவமலம். ஆணவமலம் திருவருள் தலைப்படுமிடத்து வலிகுன்றுமேயன்றி முற்றும் அழிந்தொழியாது.

அதுபோல ஆணவமே உருக்கொண்ட சூரனும் சிங்கன், தாரகன் போன்று அழியாது நாத தத்துவமான சேவலும் மண்முதல் முப்பத்தாறு தத்துவங்களின் பரு உருவாகிய மயிலுமாகி கந்தப் பெருமானைச் சுமக்கும் பேறு பெற்ருன்.

வேலை நினைக்க அறியாமையும் மயிலை நினைக்க பயமும் அறும். ஆகவே வேலும் மயிலும் துணை என்பதே நம்மை உய்யக் கொள்ளும் மந்திரமாகும்—

—இப்படி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் சொன்ஞர். (உ-எ)

## சமய சந்திகளில்

### பதினுருவது சுமங்கலி பூஜை

யாழ்ப்பாணம், நவ.4

வண். (வடமேற்கு (ஆனைக்கோட்டை) ஸ்ரீ வீரமாபிடாரி அம்மன் ஆலயத்தில்16ஆவது திருவிளக்குபூஜை (சுமங்கலி பூஜை) எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும்.

தீபாவளி தினத்தன்று நடைபெற்ற 15வது திருவிளக்குப்பூஜையில் புதிய எழுந்தருளி விநாயகர், முருகன் புதிய மூஷிக. மயில் வாகனங்களில் எழுந்தருளி அருள்பாலித்தனர்.

திருவிளக்கு பூஜைகளில் பங்குபற்றி பயன் பெற்ற அடியார்களின் காணிக்கையாக ஆலயத்திற்கு இவை அன்பளிக்கப் பட்டிருந்தன. (ஒ)

## இசை, நாடக நடன இறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 4

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மூலம் பாடசாலை அபிவிருத்திக்கான நிதியை மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளலாம். இதனுல் எமது கலை, கலாசாரம், பண்பாடுகள் என்பனவும் பேணிக் காக்கப்படும்.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இசை, நாடக, நடன இறுதிப் போட்டிகளின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசுகையில்

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறிஞர். (இ-5)

## மணி மண்டப திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4

காரைநகர் மணிவாசகர் சபையினர் மணிவாசகர் மணிமண்டபத் திறப்பு விழாவும் 46 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் புதன்கிழமை (நாளை) பிற்பகல் திண்ணபுரத்தில் நடைபெறும்.

பொதுக் கூட்டத்துக்கு திரு. செ. தேவதாசன் தலைமை வகிப்பார். (உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

# உதயன்

04 - 11 - 1986 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

## பணயக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்த நிலையில் கொண்டு செல்லப்படுவதைக் கண்டார்.

உடனடியாக மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரியுடன் தொலைபேசி மூலம் அவர் தொடர்பு கொண்டார்.

அதிகாரி இல்லாதபடியால் அவரால் முறைப்பாடு எதுவும் செய்ய முடியவில்லை.

கொக்கட்டிச்சோலையில் முகாம் ஒன்று அமைப்பதற்காகக் களுவாஞ்சிக்குடி முகாமில் இருந்து சென்ற ஆயுதப்படையினர் முகாம் அமைக்க முடியாத நிலையில் திரும்புகையிலேயே பெரிய போரதீவு, முனைத்தீவு, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300க்கு மேற்பட்ட பொது மக்களைத் தமது பாதுகாப்புக்காக பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு வந்தனர். (இ-எ-21)

## தமிழ் நாட்டில்
# அ. தி. மு. க -- இ. காங். கூட்டரசு ஏற்படுமா?

சென்னை, நவ. 3

தமிழ் நாட்டில் அ.தி.மு.க.— இந்திரா காங்கிரஸ் கூட்டரசு ஒன்று ஏற்படும் வாய்ப்பு அதிகரித்து இருப்பதாக சென்னை வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

அண்மையில் முதலமைச்சர் நடத்திய அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்து இது பற்றி பகிரங்கமாக கருத்துக்கள் வெளி வர ஆரம்பித்துள்ளன.

அமைச்சரவை மாற்றம் புதுடில்லியில் உள்ள அதிகாரத்தின் கட்டளைப்படிதான் நடந்திருக்கிறது என்று தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் தெரிவித்திருக்கிறார். (இ-ஐ-எ)

## மைசூர்பருப்பு விலை குறையும்

கொழும்பு, நவ. 4

மைசூர்ப் பருப்பின் இறக்குமதித் தீர்வை ஒரு கிலோவிற்கு 7-50 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிலோ 20 ரூபாவாக இறக்குமதித் தீர்வை இருந்து வந்தது. (இ-எ)

## திரியாயில் 8 சிப்பாய்கள் காயம்

திருகோணமலை, நவ. 4

திருகோணமலைத் தொகுதியில் திரியாய் என்னும் இடத்தில் நேற்று இடம்பெற்ற ஆயுதப்படையினர் — போராளிகள் மோதலில் 8 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த சிப்பாய்கள் விமான மூலம் கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டனர். (இ-எ-1)

## சகல பாடசாலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமை மாணவர்கள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பர்.

கடந்தவாரம் கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகம் குறித்தும் யாழ்- மத்திய கல்லூரி மீதும் ஏனைய கல்லூரிகள் மீதும் கோட்டையில் இருந்து ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் குறித்தும் பல விவரங்கள் கொண்டதாக பிரஸ்தாபமகஜர் விளங்கும்.

இதே வேளை—

யாழ்-மத்திய கல்லூரி மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு நடத்த முடிவு செய்துள்ளனர். (அ.10-5)

## டிக்ஸிற்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்களின் நிலைப்பாட்டினை அறிந்துகொண்ட பின்னரே திரு. டிக்ஸிற் கொழும்பு திரும்பினார் என்று இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

## வவுனியாவில் கைதான
# வலது குறைந்த இளைஞர் பற்றித் தகவல் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 4

வவுனியாவில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட வலது குறைந்த தமிழ் இளைஞர் ஒருவர் பற்றி வவுனியா மாவட்டப் பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் பாதுகாப்பு வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இளைஞனின் பெயர் சிதம்பரப்பிள்ளை நாகமணி, வயது 31. நெடுங்கேணிக்கு அருகிலுள்ள வெடிவைத்தகல்லு என்னுமிடத்தில் தோட்டம் செய்து வந்தார். அங்கு வைத்தே அவரை ஆயுதப்படையினர் கைது செய்தனர்.

அதன் பின்னர் அவர் பற்றிய தகவல் எதுவும் இல்லை. மாவட்டப் பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் பரராஜசிங்கம் வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார்.

அப்படி ஒருவரைக் கைது செய்யவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞன் வாய்பேச முடியாதவர் என்று டாக்டர் பரராஜசிங்கம்இராணுவ வட்டாரங்களுக்குத் தெரிவித்தார். (இ-எ)

## பதவி வெற்றிடங்கள்

எமது போக்குவரத்துச் சபை அலுவலகத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ தகுந்த சம்பளம் வழங்கப்படும். ★

1. மோட்டார் வாகனப் பரிசோதகர்
2. காசாளர்கள்
3. எழுதுவினைஞர்கள்
4. ஆங்கில, தமிழ்மொழி தட்டெழுத்தாளர்கள்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை விண்ணப்ப முடிவுத் திகதியான 15-11-86க்கு முன்னதாக புலிகளின் குரல் செய்திப்பலகையில் உள்ள ஆலோசனைப் பெட்டிகளில் சேர்க்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

## 5 ஆம் வகுப்பு புலமை---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ரத்துக்குப் பெருமை கிடைத்திருப்பதாகக் கோப்பாய் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தெரிவித்தார்,

யாழ் மாவட்டத்தில் இம்முறை 63 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 மாணவர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 மாணவர்களும், கல்முனைக் கல்வி மாவட்டத்தில் 16 மாணவர்களும், திருகோணமலையில் 12 மாணவர்களும், வவுனியாவில் 7 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 7 மாணவர்களும், முல்லைத்தீவில் 7 மாணவர்களும் மேற்படி புலமைப்பரிசில் பெறும் தகுதி பெற்றுள்ளனர்.

தென் மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டத்தில் 32 மாணவர்களும், கண்டி மாவட்டத்தில் 24 மாணவர்களும், கொழும்பு தெற்குகல்வி மாவட்டத்தில் 28 மாணவர்களும் புலமைப்பரிசில் பெறும் தகுதி பெற்றுள்ளனர். (இ-119)

## தீர்வு-..-

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தந்துள்ளனர்.

இவற்றைமத்திய அரசு, மாநில அரசு ஆகியன பரிசிலனை செய்யும்.

தேவை ஏற்படின் போராளித் தலைவர்கள் அழைக்கப்பட்டுகருத்துக்கள் கேட்டுக் கொள்ளப்படும்.

இப்படி முதலமைச்சர் இராமச்சந்திரன் சொன்னார். (இ-எ)

## இன்று----

வர் டாக்டர் கன்மோடி அல்விஸ், செயலாளர் டாக்டர் ரட்ணப்பிரிய ஆகியோரேஇன்றுயாழ்ப்பாணம் வருகின்றனர். (இ-10)

## நீத்தார் பட்டியல்

### சின்னத்துரை இராஜேந்திரம்

சங்கரத்தையைச் சேர்ந்த சின்னத்துரை இராஜேந்திரம் காலமானார். அன்னார் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை, திருமதி சின்னத்துரையின் அருமைப் புதல்வனும் சங்கரத்தையைச் சேர்ந்த தங்கவதியின் அன்புக் கணவரும், சுபஞ, சுலோச்சஞ, சுஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்,




ரெட்ஸ்டார்
வீடெம்
600 சக 400

(எம். சி. பீ. ஏ 60% சக 40%)
ரெட் ஸ்டார் வீடெம் 600 சக 400 நெற்பயிருடன் போட்டியிட்டு வளரும் அகன்ற இலைகளாகிய கிடச்சி, புளியாரி, நீர்கோவா ஆகியவற்றையும் சிறுகோரை, சந்தணகோரை, பன் ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும். நெல் விதைத்து 21 நாட்களுக்கும் 42 நாட்களுக்கு மிடையில் தெளித்தால் சிறந்த பலனடையலாம்.

வீடெம் 400 ரூ 41/50ம் அதற்குமேலும்
வீடெம் 600 ரூ 19/50ம் அதற்குமேலும்

எச்சரிக்கை!- எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்ரட் வங்கி கட்டிடம், கொழும்பு.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் அ. கந்தசாமி


(முன்னாள் அதிபர், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

நான்கு கால் கொண்டதொரு
நன்மாடமாகி நின்ருய்
நரை விழுந்த தோற்றமதை
நலமுடனே விலக்கி நின்ருய்
ஊன்றுகோல் ஊன்றி நிதம்
உயிர் வாழ்தல் உதறி நின்ருய்
உத்தமனும் உமைபங்கன்
உள்ளமதில் உறைந்திடவோ!

உங்கள் சிந்தனையில் உயிர் வாழும்,
திருமதி கந்தசாமி, சிவாஜி,
கௌரி, சிவராஜசுந்தரம்.

உடுவில் மேற்கு,
சுன்ஞகம். 4-11-86.

## வானுலகு வழி திறந்த நாள்



### வாழ்வாங்கு வாழ்ந்த இளையதம்பி வைத்தியலிங்கம் (என்ஜினியர்)

அருமையான அன்பர் — உள்ளார்வமுள்ள நண்பர்
பெருமையாக நாளும் நான் பேசும் ஆன்மநேயர்
பிரியமான ஆன்மா என்னுள் பேசுகின்ற தோழர்
அரியசைவத் தங்கம் சுத்தானந்தச் சுரங்கம்
சிரித்த செவ்வழகர் கலைதிகழும் சிற்பச் செல்வர்
உரித்த வாழைப்பழம் போல் இனிக்கும் உள்ளன்புப் புலவர்
திருத்தமான தமிழ்பேசும் தெளிந்த சொல்லரசர்
கருத்தினிய கலைஞர் சொன்ன காரியத்தை முடிப்பார்
எனது யோகசித்தி உலகம் ஏற்றும் பாரதசக்தி
பெருகு நூற் குழாங்கள் எல்லாம்
பிரியமாகக் கற்ருன் என்பேரன்பினைப் பெற்ருன்
சிரிமலர் முகத்தான் சிவசிந்தை செய்மனத்தான்
ஒருமைகொண்ட உள்ளான் என் உயிரனைய செல்வன்
என்ஜினியர்ச் செல்வன் அவன் எங்கும் உள்ள ஒன்றை
நெஞ்சக் கோயில் உள்ளே வைத்த நிமலன் ஆன்மநேயன்
துய்த்த இல்லறத்தில் ஒளிதூண்டி நீண்ட நாட்கள்
சிற்பச் செல்வனுக நம் சிந்தைக் கினியனுக
பொற்புடன் உலகம் மிகப்போற்ற வாழ்ந்த புலவன்
வைத்தியலிங்கச் சிற்பி உலகில் வாழ்ந்த நாட்கள் எல்லாம் இன்பம்
துய்த்தருளிக் கலந்தான் செல்வத் தோன்றலாக வாழ்வான்
ஊன் உடலை விட்டான் அவன் ஒளி உருவில் வாழ்வான்
வானும் பூவும் காண்போம் உள்ளே வசித்த சிவசிவனை
சிவனருளே ஆன்மா பரசிவமாமே உலகம்
சிவமயப் பொருளேலிங்கம் சிவனைக் காண்போம் எங்கும்.

- கவியோகி சுத்தானந்தபாரதி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவெட்) லிமிட்டட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 04 - 11 - 1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number QJ/80N/86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org